# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை

## அசல் வழக்கு எண். 13/2022

PW1 – திரு. கார்த்திக் நாள். 11.06.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திருமதி.B.ராமு என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. என்ன பரிகாரம் கேட்டு இவ்வழகக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தந்தை முத்துலிங்கம் இறந்து விட்டார் அவரது வாரிசு தொடர்பாக தாக்கல் செய்துள்ளேன். 1, 2 மற்றும் 4 வாதிகள் எனக்கு என்ன உறவு முறை என்றால் 1ம் வாதி எனது தயார், 2ம் வாதி எனது சகோதரி, 4ம் வாதி எனது சகோதரர் ஆவார். எனது தந்தை எனது தாயாரை திருமணம் செய்வதற்கு முன்னர் திருமணமானவர் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி இராமாமிர்தம் எனது தந்தையின் முதல் மனைவி என்றால் சரிதான். 3ம்பிரதிவாதி ஜெயசித்ரா யாரென்றால் எனது தந்தையின் முதல் மனைவியின் மகள். 3ம் பிரதிவாதி எனது தந்தையின் வாரிசு என்றால் சரிதான். 4ம்பிரதிவாதி உயிருடன் வெளியன்குடியில் வசித்து வருகிறார் என்றால் சரிதான்.

2. எனது தந்தைக்கு 4ம் பிரதிவாதி மூலம் ஆண் வாரிசுகள் உண்டா என்றால் இல்லை. வருவாய் துறை விசாரணையில் 4ம் பிரதிவாதிக்கு சித்தா என்கிற ஆண் வாரிசு உண்டு என சொல்கிறார்கள் என்றால் ஆண் வாரிசு எதுவும் இல்லை. எனது தந்தைக்கும் 4ம் பிரதிவாதிக்கும் சட்டப்படி விவாகரத்து

நடைபெற்றதா என்றால் கிராமத்தில் பத்திரம் மூலம் விவாகரத்து நடைபெற்றது. மேற்படி பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி பத்திரம் என் வசம் எவ்வாறு உள்ளது என்றால் என் தந்தை வைத்திருந்தார் அதன் படி என் வசம் உள்ளது.

3. வா.ச.ஆ1 விவாகரத்து பத்திரமானது விவாகரத்து செய்ய செல்லக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. எனது தந்தை உயிருடன் இருக்கும் வரை 4ம் பிரதிவாதியுடனான திருமண உறவு முறிவு பெறாமல் இருந்ததது என்றால் சரியல்ல. எனது தயாார் 1ம் வாதிக்கும் எனது தகப்பானருககும் நடைபெற்ற திருமணமானது செல்லக்ககூடியது இல்லை என்றும், அதனால் எனது தகப்பனாருக்கு எனது தாயார் சட்டப்படியான வாரிசாக ஆகமாட்டார் என்றால் சரியல்ல. எனது தகப்பானருக்கு 2 முதல் 4 வாதிகளும் 3, 4 பிரதிவாதிகளும் மட்டுமே சட்டப்படியான வாரிசுகள் என்றால் சரியல்ல. நான் எனது தகப்பானருக்கு வாரிசு சான்றிதழ் கோரி 2ம் பிரதிவாதியை அணுகினேனா என்றால் அணுகினேன். 2ம் பிரதிவாதி என்ன பதில் கொடுத்தார் என்றால் முதல் மனைவி உயிருடன் இருப்பதால் இரண்டாவது மனைவியை வாரிசாக அறிவிக்க இயலாது என்றும், நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளும் படி பதிலளித்தார். நான் கேட்டுக் கொண்ட பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது இல்லை என்றும், வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை